
www.tamilarangam.net

raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில குறிப்புகள்

ஒவ்வொரு மாதமும் கலை, இலக்கியங்கள், தகவல்களைத் தேடித் 'தூண்டில்' போடும் எங்களுடன் உங்களையும் சேர்ந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம். தூண்டிலில் காத்திரமான, ஆரோக்கியமான, தரமான ஆக்கங்களைச் சிக்க வைப்பது உங்களதும் பொறுப்பே. தூண்டிலுக்கு ஆக்கப் பஞ்சம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.

தூண்டிலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்கள் முழுத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டிருத்தல் விரும்பத் தக்கது. ஆக்கங்களை அனுப்புபவர்கள் தங்களுடைய சொந்தப் பெயர், முகவரிகளைத் தெளிவாக எழுத வேண்டும். சொந்தப் பெயரிலா, புனை பெயரிலா ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

உங்கள் ஆக்கங்களுக்கான தலைப்புகளையும், பிரசுரிக்க வேண்டிய பெயரையும் நீங்களே அழகான கையெழுத்தில், பொருத்தமான அளவுகளில் எழுதியனுப்பலாம். உங்கள் ஆக்கங்களுக்கான சித்திரங்களையும் நீங்களே வரைந்து அனுப்பலாம்.

தூண்டிலில் இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் சிறுகதை, கவிதை போன்ற குறிப்பிட்ட பகுதிகள்தான் தொடர வேண்டும் என்றில்லை. உங்கள் மனதில் தோன்றும் புதிய அம்சங்களையும் அனுப்பி வையுங்கள். பொருத்தமானவை நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு நகரங்களிலுமிருக்கும் தூண்டில் வாசகர்கள் தாங்களே நிருபர்களாக மாறி தங்கள் நகரில் நடக்கும் செய்திகளையும், தமிழர்களுடன் சம்பந்தப்பட்ட தகவல்களையும் அனுப்பி வைக்கலாம். இதே போல் ஏனைய நாடுகளிலுள்ள வாசகர்கள் தங்கள் நாடுகளின் செய்திகள், அங்கிருக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி எழுதியனுப்பினால் ஏனைய தூண்டில் வாசகர்களும் இந்த விடயங்களை அறிந்து கொள்வார்கள்.

தூண்டிலைப் படிப்பதுடனும், ஆக்கங்களை அனுப்புவதுடனும் மட்டும் நின்று விடாமல் தூண்டிலைப் பற்றிய முழுமையான விமர்சனங்களையும் அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்களைப் பாராட்டி ஊக்குவிப்பதுடன், தவறுகளைச் சுட்டிக் காட்டி திருத்துவதும் உண்மையான வாசகரின் கடமையாகும்.

வாசகர்களின் ஆர்வம் சஞ்சிகை வளர்ச்சிக்கு அவசியமாகும்.

— கடலோடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழரின் இலக்கிய ஆர்வம்

கலை, இலக்கிய, கலாச்சாரங்கள் மனிதனுடன் பின்னிப் பிணைந்தவை. மனித மன உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும், அறிமுகமில்லாதவர்களின் தனி மனிதர்களின் விருப்பு, வெறுப்புகளைத் தெரிந்து கொள்வதாகவும், சமூகத்தைத் தெரிந்து கொள்வதாகவும் கலை, இலக்கியங்கள் அமைகின்றன. பொதுசனத் தொடர்புச் சாதனங்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற நூல்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ் இலக்கியங்களின் பிறப்பிடமாக தமிழகம் இருந்தாலும், ஈழத்து இலக்கியங்களும் முன்னேக்கிய வளர்ச்சியில் உள்ளன. இரண்டு நாட்டு இலக்கியங்களிலும் ஏராளமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரண்டு நாட்டினதும் இலக்கிய கர்த்தாக்களைப் போலவே வாசகர்களினதும் ரசனைகள் வேறுபட்டுள்ளனவா?

ஈழத்து இலக்கிய வரலாற்றில் சாதனை நிலைநாட்டி தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள் 'மல்லிகை', 'சிரித்திரன்' ஆகிய இரண்டும்தான். இதே சமயம் சஞ்சிகைகள் என்ற முத்திரையில் இருபதிற்கும் மேற்பட்ட வார, மாத இதழ் குப்பைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு அமோகமாக விற்பனையாகின்றன. இந்தியக் குப்பைகளின் கவர்ச்சியில் ஈழத்தின் இலக்கியங்களும், இலக்கிய கர்த்தாக்களும் ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். இவற்றிற்கு யார் காரணம்? நிச்சயமாக ஈழத்து வாசகர்கள்தான்.

'மாணிக்கம்', 'சுடர்', 'மதனன்', 'கண்மணி' போன்ற இன்னும் பல சஞ்சிகைகள் தோன்றி அற்ப ஆயுளுடன் மடிந்து விட்டன. எத்தனையோ எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை, தங்களுடைய சொந்தப் பணத்திலேயே வெளியிட்டார்கள். அவைகள் அத்தனையும் கடைகளில் அப்படியே தேங்கிக் கிடந்தமையினால் படைத்தவர்கள் பொருளாதார நஷ்டத்தையடைந்ததுடன், விரக்தியுமடைந்தார்கள். பல எழுத்தாளர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய வீரகேசரிப் பிரசுரங்கள் கூட குறிப்பிட்ட எண்ணிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையுடன் நின்றுவிட்டன. இப்படியாக ஈழத்து இலக்கிய வளர்ச்சியை முடக்கியதுடன், ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளையும் விலகிப் போகச் செய்தமைக்கும் ஈழத்து வாசகர்களே பொறுப்பாளிகள்.

தமிழ்நாட்டு இலக்கியங்களைப் படிக்காதே என்று யாரும் ஒரு போதும் சொல்லவில்லை. தமிழ்நாட்டின் தரமான இலக்கியங்கள் கூட இன்று யாராலும் அறியப்படாமல் பின் தள்ளப்பட்டு, எந்தப் பயனுமற்ற கவர்ச்சி ஆபாசக் குப்பைகள்தான் மூலை முடுக்கெங்கும் பரவியுள்ளன. உண்மையான இலக்கியங்களைத் தேடும் ஆர்வம் குறைந்து வருவதால் இன்னும் போலிகளுக்கே வரவேற்புக் கொடுக்கப்படுகிறது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளில் கூட சந்தை கிடைக்கும் என்ற தைரியத்தில்வார மாத சஞ்சிகைகள் தமிழகத்தில் பெருகிக் கொண்டே போகின்றன. நீங்கள் எதைக் கொட்டினாலும் நாங்கள் பொறுக்குவோம் என்று உற்சாகமளித்துக் கொண்டு ஈழத்து வாசகர்களும் தயாராக இருக்கிறார்கள். இந் நிலையில் ஈழத்தில் இலக்கிய வளர்ச்சி ஏற்படுவது எப்படி?

ஈழத் தமிழர்கள் பலர் இன்று தாய்நாட்டை விட்டு அந்நிய நாடுகளில் சிதறியிருக்கிறார்கள். இந் நிலையில் இந்த நாடுகளிலுள்ள ஈழத்து படைப்பாளிகளின் முயற்சிகளுக்கு வாசகர்கள் எந்தளவில் ஆதரவளிக்கிறார்கள்?

மேற்கு ஜேர்மனியில் ஆரம்பத்தில் வெளிவந்த சஞ்சிகைகளான 'அப்பீர்', 'வசந்தம்' ஆகிய இரண்டும் இப்போது வெளிவருவதில்லை. இதற்குப் பின் 'நம்நாடு' என்ற சஞ்சிகை வெளிவந்து இடையிலேயே நின்று விட்டது. தொடர்ந்து 'அறுவை' என்ற சஞ்சிகை புத்துணர்ச்சியுடன் வெளிவந்து, அதுவும் இடையில் தடைப்பட்டு விட்டது. 'தென்றல்' என்ற சஞ்சிகையும் அண்மையில் நின்றுவிட்டது. இப்படிச் சஞ்சிகைகள் அவ்வப்போது தோன்றி மறைவதற்குக் காரணம் என்ன?

தரமில்லையென்பதற்காகவே அனைத்துச் சஞ்சிகைகளையும் வாசகர்கள் நிராகரித்தார்கள் என்றில்லை. பக்கத்திலிருந்தால் அருமை தெரிவதில்லை என்பது போல தங்களுடன் இருக்கும் தமிழ் நண்பர்களின் இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்க யாரும் முன்வருவதில்லை. யாரும் தட்டிக் கொடுப்பதில்லை. மாறாக தட்டிவிழுத்தவே முயல்கிறார்கள். இந்த மனப் போக்கு ஈழத் தமிழர்களிடையே பரவலாக உள்ளது.

சஞ்சிகைகளின் திடீர் மறைவுக்கான காரணங்களில் ஒன்று பொருளாதாரம். இரண்டாவது ஆக்கப் பஞ்சம். பொருளாதாரம் சஞ்சிகையைப் பாதிக்க வாசகர்கள் அனுமதிக்கலாமா? ஒரு மாதம் 5 டி. எம்மை புத்தகங்களுக்காகச் செலவு செய்வது முடியாத காரியமா? இவை சாத்தியமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வையாக இருந்தும் இந்த நிலை தொடர்வதை வாசகர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பதேன்? ஈழத் தமிழர்கள் அந்நிய நாடுகளில் தமிழ்ச் சஞ்சிகையை வெளியிடுகிறார்கள் என்றால் அது எல்லாத் தமிழருக்கும் பெருமையல்லவா? எங்கள் சகோதரர்களை நாங்களே உற்சாகப்படுத்தாவிட்டால் வேறு யார் செய்வார்கள்?

இனியாவது வாசகர்கள் ஈழத்தவர்களின் இலக்கிய முயற்சிகளுக்கு சிறிதளவு பணத்தை ஒதுக்கி வைக்க வேண்டும். சஞ்சிகைகளுக்கு வரும் சந்தாக்களில் யாரும் வீடு கட்டப் போவதில்லை. ஒவ்வொருவரும் தாமே பணம் கொடுத்து வாங்கிப் படிப்பதுடன், ஏனையோருக்கும் அப் புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களையும் வாங்கும்படி தூண்ட வேண்டும். சிறு துளி பெரு வெள்ளம். வாசகர் வட்டம் பெரிதாகும்போது ஆசிரியர்களும், வெளியீட்டாளர்களும் நிச்சயம் உற்சாகமடைவார்கள். இந்த உற்சாகம் அவர்களின் முயற்சிக்கு உந்து சக்தியாகும்.

இரண்டாவது காரணமான ஆக்கப் பஞ்சம் தற்போது பல சஞ்சிகைகளை மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. சஞ்சிகைகளின் தரம் நலிவடைவதற்குக் காரணம் காத்திரமான ஆக்கங்கள் கிடையாமைதான். அண்மையில் நின்றுபோன சஞ்சிகையில் ஐந்துக்கும் மேற்பட்ட பெயர்களில் ஆக்கங்களைத் தானே படைத்ததாக அதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். தற்போதும் பல சஞ்சிகைகளில் அவற்றின் ஆசிரியர்கள் மட்டுமே ஆக்கங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

போதுமான இலக்கியப் படைப்பாளிகள் நம்மிடையே இல்லை என்றுசொல்ல முடியாது. பலருக்கு நல்ல திறமையிருந்தும் பேனாக்களை மூடி வைத்துவிட்டு ஏனோ தானோவென்று தங்களுடைய அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நேரமில்லை என்ற போலிச் சாட்டையும் சிலர் சேர்த்துக் கொள்கிறார்கள். இப்போது ஒதுங்கியிருந்துவிட்டு இலக்கியம் அழிந்துவிட்டது என்று பின்னர் ஒப்பாரி வைக்கலாமா?

முன்பு சஞ்சிகையை வெளியிட்டு, அது நின்று போனபின் இலக்கிய முயற்சிகளை முற்றாக கைவிட்டவர்களின் செய்கை வருந்தத்தக்கது. ஒரு சஞ்சிகையை வெளியிடும்போது ஏற்படும் கஷ்டங்கள், நஷ்டங்கள் பற்றி மற்றையவர்களைவிட இவர்களுக்கு நன்றாகத் தெரியும். அனுபவத்தின் மூலம் இதைத் தெரிந்து கொண்டும் இந்த முன்னாள் ஆசிரியர்கள் பேனாவை மூடி வைத்திருப்பது வேதனையானதுடன் முன்பும் இவர்கள் விளையாட்டாகத்தான் சஞ்சிகை வெளியிட்டார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே இவர்கள் தங்களுடைய சஞ்சிகைகளைப் போல இப்போது வரும் சஞ்சிகைகளும் நின்றுவிடாமலிருக்க வேண்டும் என்று உண்மையாக விரும்பினால் மறுபடி எழுத ஆரம்பிக்கட்டும்.

www.tamilarangam.net

ஏற்கெனவே கொஞ்சம் பிரபலமானவர்கள்தான் எழுதலாமென்றில்லை. ஒவ்வொருவரிடமும் திறமை ஒளிந்து கொண்டிருக்கிறது. அவர்களால் அதை அறிய முடியாவிட்டாலும் மற்றவர்களால் அறிந்து கொள்ள முடியும். எனவே கதை, கட்டுரை, கவிதை என்று எல்லோரும் எழுதிக் குவிக்க வேண்டும். நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் பிரசுரமாகாவிட்டாலோ, திரும்பி வந்தாலோ சோர்வடையாதீர்கள். தொடர்ந்தும் எழுதுங்கள். தொடர்ச்சியான எழுத்துப் பயிற்சி நல்ல பலனைத் தரும். பலர் ஆக்கங்களை அனுப்பிவிட்டு அவை பிரசுரமாகாவிட்டால் அந்தச் சஞ்சிகை வாசிப்பதையே நிறுத்தி விடுகிறார்கள். அல்லது எழுதுவதை நிறுத்தி விடுகிறார்கள். இவையிரண்டும் முற்றிலும் தவறான செய்கைகளாகும். முன்னேற விரும்புபவர்கள் தாழ்வு மனப்பான்மையை நீக்கி முயற்சியைத் தொடர வேண்டும்.

ஈழத்தவர்களின் இலக்கிய முயற்சிகளைத் தடைப்படுத்துவதில் இந் நாடுகளில் புத்தக விற்பனை நிலையம் வைத்திருப்பவர்களும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். நமது மண்ணைச் சேர்ந்தவர்கள்தான் மிகவும் கஷ்டப்பட்டு நூல்களை வெளியிடுகிறார்கள் என்ற அக்கறை சிறிதுமில்லாது ஈழத்தில் வாசகர்களின் ரசனைகளை மழுங்கடிக்க காரணமாக இருந்த அதே காகிதக் குப்பைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து இங்கும் விற்க ஆரம்பித்து விட்டார்கள். எங்கோ இருந்து வரும் கழிவுகளைப் பெருமளவு விளம்பரம் செய்து, விற்பனையாக்கி யாருக்கோ வருமானத்தையும், சந்தையையும் ஏற்படுத்திக் கொடுப்பவர்களும் ஈழத் தமிழர்கள்தான். இவர்களின் இடையூறால் தங்களது முயற்சிகளை பலவந்தமாக நிறுத்த வேண்டியிருப்பவர்களும் ஈழத் தமிழர்கள்தான். இந்த இரு பகுதியினருக்குமான இடைவெளி எந்த ஒரு ஈழத் தமிழருக்கும் பயனளிக்காத பாதிப்பைத்தான் ஏற்படுத்துகிறது என்பதை இனியாவது இந்த 'அந்நியச் சரக்கு' விற்பனையாளர்கள் உணர வேண்டும். இவர்கள் வேண்டுமானால் தரமான இலக்கியங்களை எங்கிருந்தாலும் பெற்றுக் கொள்ளட்டும். கழிவுகள் மட்டும் வேண்டாம்.

ஆக்கங்களைப் படைப்பதிலும், வாசிப்பதிலும் மட்டும் இலக்கிய ஆர்வம் தெரிவதில்லை. ஓர் உண்மையான இலக்கிய ஆர்வலரின் கடமை சரியான இலக்கியங்களுக்கு ஆதரவு கொடுப்பதும், போலிகளை ஒழிப்பதுமாகும். இதற்காக கவனமெடுத்து அனைத்து ஆக்கங்களையும் முழுமையாக ஆராயவேண்டும். நிறை, குறைகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றை தெரிந்து கொள்வதுடன் நின்று விடாது உரியவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் இலக்கிய கர்த்தாக்கள் தங்களை சீர்ப்படுத்திக் கொள்ள முடியும்.

தாண்டிலில் நூல் அறிமுகம் செய்யப்படும் சஞ்சிகைகளில் வெளிவரும் சில கருத்துகளுடன் எமக்கு உடன்பாடு இல்லாவிடினும், அச் சஞ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிகையை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் வாசகர்கள் நேரடியாகவே தங்களுடைய கருத்துகளைப் பரிமாறிக் கொள்வார்கள் என்பதற்காகவே நூல் அறிமுகம் பகுதி ஆரம்பிக்கப்பட்டது.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு உங்களின் பங்களிப்புகள் எந்தெந்த வகையில் தேவை என்பதை எமக்குத் தெரிந்தவரை தந்துள்ளோம். ஒவ்வொரு ஈழத் தமிழ் வாசகர்களும் உங்கள் மண்ணைச் சேர்ந்தவர்களின் சிறந்த முயற்சிகளுக்கு மனமுவர்ந்து ஆதரவளிக்க வேண்டும். அவர்களுடைய முயற்சிகளில் ஆர்வம் காட்ட வேண்டும். இதில் உங்கள் தாய் மண் மீதிருக்கும் பற்றும், தமிழ் ஆர்வமும் காணப்படுவதை நீங்களே புரிந்து கொள்ளலாம்.

"கேள்வியும் பதிலும்"

நூண்டில் கலம் பதினொன்றிலிருந்து 'கேள்வியும் பதிலும்' என்ற புதிய பகுதி ஆரம்பமாகிறது. கேள்விகளைக் கேட்பது நீங்கள். பதிலளிக்கப் போவது உங்கள் கேள்விகளுடன் சம்பந்தப்பட்டவர்கள்.

இப் பகுதியின் முதற் தொடராக உங்கள் கேள்விகளுடன் சட்டத்தரணியைச் சந்திக்க இருக்கிறோம். சட்ட ரீதியிலான உங்கள் சந்தேகங்களை இம் மாதம் முப்பதாம் திகதிக்கு முன் (30.09.88) எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். உங்கள் கேள்விகள் உங்களுடன் சேர்த்து மற்றவர்களுக்கும் பயனளிக்கக் கூடியதாக இருக்கட்டும்.

இத் தொடரில் தொடர்ந்து வைத்தியர், எழுத்தாளர், கவிஞர் போன்ற வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் பதிலளிக்கப் போகிறார்கள்.

இப் பகுதியைச் சிறப்பிக்க வேண்டியது நீங்களே.

— கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

'ஒப்பந்தங்களும், ஒப்பாரிகளும்' என்ற கட்டுரை இன்றைய நிலையில் மிக மிக அவசியமானதே. எமக்கென்ன நடந்தது? ஏன் இடம் பெயர்ந்தோம்? ஏன் போராட வேண்டும்? என்ற வினாக்களுக்கு விடை புரியாமல் எம்மிடையே எத்தனையோ பேர் இருக்கிறார்கள். கட்டுரை எல்லோருக்கும் புரியக் கூடிய வகையில் அமைந்திருந்தது. 'இந்திய ஆக்கிரமிப்பும், எமது போராட்டமும்' என்ற கட்டுரையில் தெளிவானது பாதை. ஆனால் இப் போராட்டம் முன்னெடுக்கப்படுமா என்பதே பலபேரின் முன்னுள்ள கேள்வி. வினா பாக்கியநாதனின் 'ஊனமுற்ற மனம்' கதையைப் போன்று இதே கருத்துள்ள கதையை ஈழத்தில் 'சுடரில்' வாசித்த ஞாபகம்.

வார்டோ (நோர்வே) தி. தயாநிதி

சென்ற இதழில் பிரசுரமான 'ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது' சிறு கதையில் 10ஆம் பக்கத்தில் 5ஆம் பந்தியிலிருந்து 13ஆம் பக்கத்தில் முதலாவது பந்திவரை கதாசிரியரின் கற்பனைகள் இங்குள்ள சூழ்நிலைகளில் தவறானவை. இந் நாட்டில் பாலர் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு வரையும் ஆசிரியர்கள் மாணவர்களின் பெயர்களைக் கூப்பிட்டு வரவைப் பதிவதில்லை. அனைவரும் தமது இருப்பிடங்களில் தம் பெயர்களை மற்ற மாணவர்களும், ஆசிரியரும் பார்க்கும் வண்ணம் எழுதி வைப்பார்கள். இதைப் பார்த்தே ஆசிரியர் வரவைப் பதிவார். எனவே 'வகுப்பில் மாணவர்களின் பெயரைக் கூப்பிட்டு ஆசிரியர் வரவைப் பதியும்போதுதான் ...' என்ற வசனத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெளிநாட்டவர் பலருடன் இணைந்து படிக்கும்போது ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி முழுமையாக அறிமுகம் செய்துகொள்ள வேண்டும். எனவே '...ஜீவனால் அவளின் பெயர் ஸில்வியா என அறிந்து கொள்ள முடிந்தது. அதைத் தவிர அவளைப் பற்றிய வேறெந்த விபரங்களையும் அவனால் சேகரித்துக்கொள்ள முடியவில்லை' என்ற வசனத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந் நாட்டில் ஒரே வகுப்பு மாணவர்கள் சந்திக்கும்போது 'கலோ' சொல்ல மாட்டார்கள். காலை, மாலை வணக்கங்களைத்தான் செலுத்துவார்கள். சரளமாக டொச் கதைத்துவிட்டால் கொம்பியூட்டர் படிக்க முடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாது. முக்கியமாக வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். இனியாவது வேற்றுநாட்டு சூழ்நிலைகளில் எழுதும்போது முக்கிய விடயங்களை கவனத்தில் கொண்டு எழுத வேண்டும். சிறுகதையில் இரண்டரைப் பக்கங்கள் வீணாகிவிட்டன.

டோற்முண்ட் — நிருபா தங்கவேற்பிள்ளை

பார்த்திபனின் 'ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது' சற்று மிகைப்படுத்தப்பட்டாலும், யதார்த்த வட்டத்தில் நோக்கும்போது மிகைப்படுத்தலும் ஒதுங்கி விடுகிறது. சேரனின் கவிதைகள் என் நினைவில் நிற்கும்படி பதிந்து விட்டன. உண்மையின் வடிவங்களாக அவரின் சொல்வீச்சு அனல் கக்குகிறது.

நூறன்பேர்க் — ப.வி. சிறீரங்கன்

ஒகஸ்ட் மாத தூண்டில் வழக்கமான பொலிவும், நிறைவுமின்றி மெலிந்து காணப்படுவதாகத் தெரிகிறது. பார்த்திபனின் சிறுகதை பெண்களை மிகவும் கவர்ந்திருக்குமென நம்புகிறேன். ஜீவன் போன்ற எத்தனையோ இளைஞர்களுக்கு இது புத்தி புகட்டுமென நினைக்கிறேன்.

றெம்சைட் — வ. அ. புவனேந்திரன்

சந்தாதாரர்களுக்கு,

புதிய சந்தாவுக்காகவோ அல்லது பழைய சந்தாவைப் புதுப்பிப்பதற்காகவோ வங்கி மூலமாகப் பணத்தை அனுப்பியபின் அது பற்றிக் கடிதம் மூலமாக எமக்கு அறிவியுங்கள். இதனால் வங்கியிலிருந்து பணம் கிடைக்கத் தாமதமானாலும் 'தூண்டில்' காலக் கிரமத்தில் உங்களுக்கு அனுப்பப்படும். வங்கி மூலமாகப் பணத்தை அனுப்பும்போது வங்கிப் பற்றுச்சீட்டுகளில் பணம் எதற்காக அனுப்பப்படுகிறது என்று கேட்கப்பட்டுள்ள இடத்தில் 'தூண்டில்' என்று குறிப்பிடுங்கள். அத்துடன் பற்றுச்சீட்டுகளில் உங்கள் பெயரை மட்டும் எழுதாது முழு முகவரியையும் எழுதுங்கள். இந் நடைமுறைகள் மூலம் எமது சிரமத்தைக் குறைக்க உதவும்படி கேட்டுக்கொள்கிறோம்.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறைகளின் பாடல்

சிறைகள் பாடின.

இரவுக்கு நிலவில்லை.
நிலவுக்கு ஒளியில்லை.
ஒளியையும் கருங்கற் சுவர்கள்
முறிக்கின்றன.

வதைகூட அறைகளுக்குள்.
பாடல் இல்லை.
ஒலி மட்டும் தனித்து அலைகிறது.
ஒலி, எதிரொலி, ஒலி எனத்
தெறித்து
முறிந்து
சிதறிப் பரவும் ஒலி
எதிரொலி.

இரும்பின் கரங்களும்
நொருங்கித் தகரச்
சிறையிருளில்
உயிர்த்திரி உருக எழுகிறது
தீபம்.

வீழ்ந்தவர்கள் விதையாகி
விதை முளைத்து மரமாகி
விழுது விட
வரலாறு கண்மலரும்.

அகாதத்திலிருந்து வரும்
ஒரு செய்திக்காகக்
கண்டுகளுக்குள் அவர்கள்
இன்னும் காத்திருக்கிறார்கள்.

விடுதலை.

**சேரன்**

www.tamilarangam.net

# பழி

— துளசி

கூதல் காற்று பரந்த மனப்பான்மையுடன் இருக்குகளுக்குள்ளால் நுழைந்து குடிசைக்குள் பரவியது. ஞானப்பிரகாசம் வீறிட்டுக் கத்திக் கொண்டிருந்தான். பெயரின் அளவிற்குச் சம்பந்தமில்லாமல் அவன் உடம்பு சிறியதாக இருந்தது. இரண்டு வயதென்றால் அப்படித்தானிருக்கும். தன்னைச் சுற்றிப் போடப்பட்டிருந்த துணிக் குவியலைத் தாறுமாறாக்கியபடி அவன் அழுது கொண்டிருந்தான்.

அவனுடைய தேவை எதுவென்று தெரிந்தும் தெரிந்து கொள்ளாதவள் போல கன்னியம்மா அவனருகில் பேசாமல் படுத்திருந்தாள். கண்கள் கூரையின் இடைவெளிகளினூடாக மேலே தெரியும் ஆகாயத்தை பார்த்துக் கொண்டிருந்தன.

சூசை சாக்கால் போர்த்திக் கொண்டு குடிசை வாசலில் மணலில் குந்தியிருந்தான். தலை மட்டுமே போர்வையிலிருந்து சுதந்திரம் வாங்கியிருந்தது.

சூரியன் கடலில் சுத்தமாகத் தலை முழுகியதால் கருமேகங்கள் உல்லாசமாக வான வீதியில் அலையத் தொடங்கின. எனினும் சிவப்பு முழுவதுமாக அழிக்கப்படவில்லை.

சில பறவைகள் கூட்டு ஞாபகம் வந்ததில் வேகமாகத் திரும்பிக் கொண்டிருந்தன.




கூச்சலிட்டுக் கொண்டு வந்த அலைகள் கரையை அண்மித்ததும் காணாமல் போய்விட்டன. அவ்வப்போது காய்ந்த ஓலைகள், மரக் கட்டைகளென்று அன்பளிப்புகளைப் பத்திரமாகக் கரையில் கொண்டு வந்து ஒப்படைத்துக் கொண்டிருந்தன.

சூசை இருந்த இடத்திலிருந்தே தலையைத் திருப்பிக் குடிசைக்குள் பார்த்தான். ஆரம்பித்திருந்த இருளிலும் ஞானப்பிரகாசம் தெரிந்தான். நீண்ட நேர அழுகையால் களைத்துப் போய் தற்காலிகமாக அவன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாலும் எந்நேரத்திலும் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்று தெரிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அருப்பங்கரையில் பூனை கட்டப் பருத்திருக்கவில்லை. இங்கிருப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லையென்று நிச்சயமாகத் தெரிந்து அந்தப் பூனை வேறிடத்துக்குப் போயிருக்க வேண்டும். அல்லது கடலில் குதித்துத் தற்கொலை செய்திருக்க வேண்டும். அந்தப் பூனை தனியனென்றபடியால் இந்த இரண்டு முடிவுகளிலும் ஒன்றைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனல் துரை அப்படிச் செய்ய முடியாது.

அவன் தனியனல்ல. கன்னியம்மாவும், ஞானப்பிரகாசமும் அவனை எதிர்பார்த்தும், அவனுக்காகவும் இருக்கிறார்கள். இப்போதும் கட.

துரை கடலையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏலேலோ"

"ஏல ஏலோ"

"ஏலேலோ"

"உன்ட மனுசி இன்னைக்கு என்ன செஞ்சு குடுத்தா?"

"அறக்குளா மீன் கொழம்பும், புட்டுமாக்கும். நீயும் தின்னு பாரன்"

"ஒனக்கு மட்டும் எப்புடி இவ்வளவு மீனு கெடைக்குது?"

"நானு கடலம்மாட மூத்த புள்ளயாக்கும்"

"கடல் கொழம்பிக் கிடக்கு. காத்து வேற பலம்மா இருக்குப்பா. நீ போவப் போறியா?"

"இப்ப நா போனு என்ட மீனுக்கு எவ்வளவு வெல வரும் தெரியுமா?"

கற்பனையில் தெரிந்த காட்சிகளை துரையின் கண்ணீர் தடை செய்தது.

'கடலுக்குப் போய் எவ்வளவு காலமிருக்கும்?' கேள்வி வேதனையைத்தான் உற்பத்தி செய்தது. கண்கள் தாமாக வள்ளத்தை நோக்கின.

மோட்டார் இல்லாமல், வெறும் பலகையாக அந்த வள்ளம் மணல் மேட்டில் உறங்கிக் கொண்டிருந்தது. அலைகள் அதைத் தொட முயற்சித்துத் தோற்றுக் கொண்டிருந்தன. வள்ளத்தில் வலைகள் தாறுமாறாகத் தொங்கிக் கொண்டிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞானப்பிரகாசம் மறுபடி கத்த ஆரம்பித்திருந்தான். அப்படிச் சத்தம் போடுவதற்காகவே அவன் சக்தியை சேமித்து வைத்திருக்க வேண்டும். அவ்வப்போது அதைப் பாவித்துக் கொண்டிருந்தான்.

சூசை இருந்த நிலை மாறாமல் தலையை மட்டும் சுழற்றிப் பார்த்தான்.

அக்கம் பக்கத்தில் முன்பிருந்ததைவிட குடிசைகளின் அடர்த்தி குறைந்திருந்தது. பலர் தங்களுடைய வள்ளத்தில் இந்தியாவுக்குப் போய் விட்டதாக பல சம்மட்டிமார் அடிக்கடி வந்து குதித்துக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் எல்லாவற்றையும் போட்டுவிட்டு எங்கேயோ இடம் பெயர்ந்து விட்டார்கள். அவர்கள் எப்போதாவது திரும்பி வரலாம் என்ற நம்பிக்கையில் குடிசைகள் இன்னும் காத்திருந்தன.

சூசை அடி வயிற்றை அமுக்கிக் கொண்டான். குடற் சுவர்கள் ஒன்றுடனொன்று உராய்ந்து எரிந்து கொண்டன. அவை நீண்ட காலமாகவே ஏமாற்றப்பட்டு வருகின்றன. ஞானப்பிரகாசத்தின் வயதில் தானுமிருந்தால் சூசை நிச்சயமாகப் பசியால் வாய்விட்டு அழுதிருப்பான்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சூசையின் வள்ளத்தில் பூட்டியிருந்த இயந்திரங்களை இராணுவம் மூலமாக அரசு பறித்துக்கொண்டுவிட்டது. இயந்திரங்கள் பூட்டப்பட்டிருந்த வள்ளம் இருக்கையிலேயே சூசையும், கன்னியம்மாவும் அதே குடிசையில்தான் இருந்தார்கள். வள்ளத்தில் பூட்டப்பட்டிருந்த இயந்திரங்களின் உதவியால் சாப்பிட ஆகாரம் கிடைத்ததே தவிர மாளிகை கட்டி, கால் மேல் கால் போட அவர்களால் முடியவுமில்லை. அது பற்றி அவர்கள் நினைக்க சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

மோட்டார்களை இழந்தபின் ஆழக் கடலில் நீண்ட தூரம் சென்று வலைபோட சூசையால் முடியவில்லை. கிடைத்த மீன்களின் அளவு குறைய அவர்களுடைய ஆகாரமும் பாதிக்கப்பட்டது. இந்த நேரத்தில்தான் கன்னியம்மா உண்டாகியிருந்தாள்.

என்னதான் இலவச மருத்துவமனை என்று பெயர் இருந்தாலும் செலவு இல்லாமலா போய் விடும்? காசில்லாதவர்களுக்கு ஆஸ்பத்திரிக்கு வந்து போகும் செலவைத் தருவதாகவோ, நோயாளிகளுக்கு குறித்துக் கொடுக்கப்படும் விற்றமின்களும், ஏனைய சத்துகளும் இலவசமாக வழங்கப்படுமென்றோ எந்தத் தர்மாஸ்பத்திரியிலும் குறிக்கப்படவில்லை.

ஆகவே சூசை கடன்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. பணத்தை விட அவனுக்கு மனைவியும், பிள்ளையுமே முக்கியம். எனவே கடனில் பூச்சியங்கள் கூடி வருவதைப் பற்றி அவன் அக்கறைப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆஸ்பத்திரிக்கும், குடிசைக்குமாக அலைந்ததில் தூசையால் பல நாட்கள் கடலுக்குள் இறங்க முடியவில்லை. வருமானம் தவிர்க்க முடியாமல் தவிர்க்கப்பட கடனில் இன்னும் கொஞ்சம் பாரமேறியது.

தூசை தனது சக்திக்கேற்ப வழங்கிய "ஊட்டச் சத்துகளால்" எலும்புடன் தோல் ஒட்டிக் கொள்ளாமல் தப்பிக் கொண்ட கன்னியம்மா புதிய வரவான ஞானப்பிரகாசத்துடன் மறுபடி குடிசைக்கு வந்த பின்தான் தூசைக்குத் தான் வாங்கியிருந்த கடனின் பெறுமதி தெரிய வந்தது.

அதற்காக அவன் மலைத்துப் போகவில்லை. மோட்டார்களை வேண்டுமானால் அரசாங்கம் பறித்துக் கொள்ளலாம். கடலை அப்படிச் செய்ய முடியுமா என்ற நம்பிக்கையில் கன்னியம்மாவுக்குக் கூடத் தெரியாமல் கடலில் நெடுந்தொலைவு போய் வலை போட்டான்.

இராணுவக் கப்பல்களின் கண்களில் பட்டு 'பயங்கரவாதி' ஆகாமல் தப்ப எடுத்த அபாயமான முயற்சிகளும், நாட்டில் நடைபெறும் படுகொலைகளைப் பற்றி அக்கறைப்படாத கால நிலைகளின் ஆபத்துகளும் தூசையின் மன உறுதியைத் தகர்த்துவிடவில்லை.

தன்னை நம்பி கரையில் இரண்டு ஜீவன்கள் இருக்கின்றன என்ற ஆத்ம துடிப்பு அவனைக் கடலில் நிற்க வைத்தது.

உடம்பு காய்ந்து, கண்கள் சிவந்து, அதிகாலையில் கரையைத் தொடும்போது முதலில் அவனைச் சந்திப்பவர் கடன் கொடுத்தவர்தான். தூசையில் அக்கறை உள்ளவரைப் போல அவன் கொண்டு வரும் மீன்களைத் தானே ஏலம் போட்டு, நல்ல விலைக்கு விற்று, ஒரு சொற்பத்தை தூசையிடம் எறிந்துவிட்டுப் போய்விடுவார்.

தனது இரவு நேர உயிராபத்தான உழைப்பைத் தரையில் சுகமாகத் துயிலும் ஒருவன் கண் முன்னாலேயே பறித்துக் கொண்டு போவதை தூசை கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருப்பான். இந்த அநியாயத்தை மற்றவர்களும் கேட்க முடியாது. கடலுக்குப் போகும் பலர் ஏதோ ஒரு விதத்தில் தங்கள் முதுகெலும்பை வளைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார்கள்.

கையில் காசைப் பார்த்ததும் தூசைக்கு ஞானப்பிரகாசத்தின் நினைவுதான் வரும். அந்தச் சின்னக் கண்களில் தெரியும் பசி அவன் நெஞ்சை உராயும்போது அவனுக்கு மற்றவையெல்லாம் மறந்து போய்விடும்.

"புள்ள பொறந்தாப் பொறகு நீ என்னைய மறந்துட்டபோலக் கெடக்கு" என்று கன்னியம்மா செல்லமாகக் கோபித்துக் கொள்வாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையாக அவர்கள் இருவரும் சேர்ந்து தங்களையே மறந்திருந்தார்கள்.

அப்படிப் பெரிதாக எதை மறந்துவிட்டார்கள்?

அவர்கள் பிள்ளைக்கு குல்லாயும், சொக்காயும் வாங்கிக் கொடுக்கவுமில்லை. உருட்டி விளையாடக் காரும், விமானமும் வாங்கிக் கொடுக்கவுமில்லை. அதற்கெல்லாம் அவர்களால் முடியாது. தங்களது உடைகள், உணவில் தியாகம் செய்து ஞானப்பிரகாசத்தின் உடம்பைக் கவனித்துக் கொண்டார்கள். அடிக்கடி வரும் நோய்களிலிருந்தும் பாதுகாத்துக் கொண்டார்கள்.

ஞானப்பிரகாசத்தின் வளர்ச்சியுடன் கடனும் வளர முயற்சிப் பதை சூசை தெரிந்து கொண்டான். இந்தப் புதை குழியிலிருந்து மீள்வதற்குச் சாத்தியமில்லை என்பதையும் தெரிந்து கொண்டான். எனவே அதுபற்றி கவலைப்படாது இயன்றவரை கன்னியம்மாவுடனும், ஞானப்பிரகாசத்துடனும் சந்தோசமாக இருக்க முயன்றான்.

இந்தச் சந்தோசம் கூடக் கொஞ்ச நாட்களுக்குத்தான்.

ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது பற்றியோ, அந்நிய நாட்டு இராணுவம் எவ்வளவு தொகை வந்திருக்கிறது என்பது பற்றியோ சூசைக்கு அதிகம் தெரியவில்லை. அது பற்றித் தெரிய வருவதற்கான சாத்தியக் கூறுகளும் அந்தச் சுற்றாடலில் இல்லை.

பார்வையாளராக இல்லாமல் பங்காளராக மாறுங்கள் என்றெல்லாம் எல்லோரும் மையை வீணாக்கி நோட்டீசுகள் தயாரித்து, சுவர்களையும், மதில்களையும் பலமாக்கிறார்களேயொழிய கடலைப் பற்றி மட்டுமே தெரிந்து வைத்திருக்கும் சூசை போன்றவர்களுக்கு யார் இவற்றையெல்லாம் புரிய வைக்கிறார்கள்? அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கும் அரசியற் சிந்தனைகளைத் தெளிவாக்கும் அக்கறை யாருக்கிருக்கிறது?

சூசைக்குக் கடலைப் பற்றி மட்டும் தெரிந்தது போல அவர்களுக்கும் ஆயுதங்களைப் பற்றி மட்டும்தான் தெரியும் போலிருக்கிறது.

சண்டை நடக்கிறது. இதில் கொல்லப்படுபவர்கள் கொல்லப் படட்டும். அவ்வப்போது 'அப்பாவி மீனவன் கொலை', 'அப்பாவி விவசாயி கொலை' என்று கறுப்பு மையில் அஞ்சலி தெரிவித்தால் போதும் என்றுதானே பலர் நினைக்கிறார்கள்.

ஏதோ மாற்றங்கள் நடக்கின்றன என்றளவில் மட்டுமே சூசைக்குத் தெரிய வந்தது. சிலவேளைகளில் பறிபோன தனது மோட்டார்கள் திரும்பக் கிடைக்கலாம் என்ற நப்பாசை அவனுக்கிருந்தது.

www.tamilarangam.net


தமக்குக் கிடைத்ததைக் கொண்டே சூசையும், கன்னியம்மாவும் ஞானப்பிரகாசத்தை வளர்த்து வந்தார்கள். ஞானப்பிரகாசமும் கடலை நம்பாது படித்து, வேறு உத்தியோகம் பார்த்து, தங்களை இருத்திச் சாப்பாடு போடுவதாக இருவரும் அடிக்கடி கனவுகள் கண்டார்கள். அந்த நம்பிக்கையே அவர்களுக்கு உற்சாகமூட்டி இயக்கிக் கொண்டிருந்தது.

திடீரென்றுதான் அந்த அறிவித்தல் கிடைத்தது.

கடல் தடை செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாகவும், தடையை மீறி கடலுக்குள் பிரவேசிப்பவர்கள் சுடப்படுவார்கள் என்றும் காக்கிச் சட்டை போட்டு, துப்பாக்கிகள் வைத்திருந்தவர்கள் நோட்டிச் போட்டு, ஒலி பெருக்கியிலும் சொன்னார்கள்.

சூசை இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

மனிதர்கள் உதவி செய்யாவிட்டாலும் கடல் இருக்கவே இருக்கிறது. அதை யார் கொண்டு போய்விடப் போகிறார்களென்ற ஆறுதல் சூசைக்கு இவ்வளவு நாளும் இருந்தது. இந்தப் புதிய அறிவித்தலால் அதுவும் மறைந்து போனது.



(தொடர்ச்சி 25ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீரகேசரிச் செய்திகள்.

29.7.88

முல்லைத்தீவு-திருமலை மாவட்ட எல்லையிலுள்ள வெலிஓயா காட்டுப்பகுதியில் 14 கிராம வாசிகளை இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி வெட்டியும், குத்தியும் சித்திரவதை செய்து கொலை செய்தது.

பல்கலைக்கழகங்களைத் திறக்கும்படி கோரி பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களின் பெற்றோர் உண்ணாவிரதமிருந்தனர்.

"இலங்கையில் அமைதிப் படையின் குறிக்கோள் நிறைவேறும்வரை அப்படை அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்படமாட்டாது."-இந்திய வெளியுறவு அமைச்சர்.

30.7.88

இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஒருவருட பூர்த்தியான 29.7.88 அன்று நாடு பூராவும் பரவலாகக் கர்த்தால் நடைபெற்றது. அநேகமான கடைகள் மூடப்பட்டிருந்தன. ஊரடங்குச் சட்டமும் சில இடங்களில் அமுல் செய்யப்பட்டது.

தமிழகத்திலிருந்து இதுவரை நாடுதிரும்பிய அகதிகளின் எண்ணிக்கை 2,14,529

31.7.88

திருமலை-முல்லைத்தீவு எல்லைப்பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுள்ள சிங்கள மக்கள் தாம் வாழும் எல்லையைக் கடந்து தமிழ்ப்பிரதேசங்களுக்குள் பிரவேசிக்கக்கூடாது என அரசு அறிவித்துள்ளது.

1.8.88

"அமைதிப்படைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குங்கள்"-டெலோ.

யாழ்ப்பாணத்தில் மினி சினிமாத் தியேட்டர்கள்மீது தாம் விதித்த தடையை விடுதலைப் புலிகள் சில விதிகளின் அடிப்படையில் தளர்த்தியதின் பேரில் மீண்டும் மினி சினிமாக்கள் இயங்கத் தொடங்கியுள்ளன.

"இன்றைய இக்கட்டான நிலையில் புதிய திருப்பம் ஏற்படுவதும், ஏற்படாததும் கடவுளையும், விடுதலைப் புலிகளையும் பொறுத்த விடயம்"-இந்தியத்தூதுவர்.

www.tamilarangam.net

இவ்வருடம் மே 31ம் திகதிவரை இலங்கையிலுள்ள இந்தியப்படையினருக்காக ரூபா 98கோடி செலவிடப்பட்டிருப்பதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பதுளை இ.போ.ச பஸ் டிப்போ உதவி அத்தியட்சகர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தொழிலாளர்களின் தேவைக்காக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியை அவர்களுக்கு வழங்க மறுத்துவரும் தோட்டத் துரைமார் அவ்வாகனத்தை துஷ்பிரயோகம் செய்து வருவது தெரியவந்துள்ளது. அண்மையில் இந்த அம்புலன்ஸ் வண்டியில் திருட்டுத்தேங்காய்கள் கடத்தப்பட்டன.

2.8.88

வவுனியாவில் நடைபெற்ற இயக்கமோதலில் கெஸ்ரோ, ஆனந்தபாபு என்ற இரு புளொட் உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொக்குவிலில் நடேஸ்வரன் என்பவரும் முருங்கனில் அல்பேர்ட், கணபதிப்பிள்ளை என்ற இருவரும் வவுனியாவில் சுப்பிரமணியம், விஜயகுமார், கதிர்காமம் என்ற மூவரும் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முருங்கனில் கண்ணவேல் என்பவர் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்ட அச்சுவேலியைச் சேர்ந்த கணேசன் என்ற விடுதலைப்புலி உறுப்பினர் பெற்றோரிடம் சடலமாக ஒப்படைக்கப்பட்டார்.

இந்தியப்படை முகாம் எல்லைக்குள் உள்ள கிணற்றிலிருந்து கார்த்திகேசு சிவநாதன் என்பவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

3.8.88

அக்கரைப்பற்றில் வசித்துவந்த சிங்கள வர்த்தகர் ஒருவரும் அவரது மனைவி, மகன் மருமகள், உறவினர் ஆகியோரும் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் துரைராஜா இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார்.

வவுனியாவிலும், நெடுங்கேணியிலும் சிவா, பேரின்பம் என்ற இருவர்உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4.8.88

மட்டக்களப்புஆரையம்பதியைச் சேர்ந்த முன்னாள் ஆங்கில ஆசிரியர் முருகேசு நடராசா முதலி இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாவலப்பிட்டியை அடுத்துள்ள கல்டோன் தோட்டத்தில் வயிற்றோட்டம் காரணமாக நான்குபேர்இறந்துள்ளனர். முப்பது பேர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விமானங்களைத் தரையிலிருந்தவாறு சுட்டுவீழ்த்தக்கூடிய ஏவுகணைகளையும், ஏவுகணை ஏவும் கருவியையும் இந்தியப்படையினர் நல்லூரிலிருந்து கைப்பற்றியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வவுனியாவில் விடுதலைப்புலிஉறுப்பினரான முகுந்தன் என்பவர்இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குருநாகல் பகுதியில் ஜே.வி.பியினர் அமுல்செய்த ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஒருவரின் கடை எரிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் மகிடிவெட்டுகாளில் செல்வராசா,பாக்கியநாதன் என்ற இருவரும் வவுனியாவில் சிவா,பெரியதம்பி என்ற இருவரும் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

5.8.88

மட்டக்களப்பில் ஆரப்பற்றில் ஈ.பி.ஆர்.எல் எவ் இயக்கத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

6.8.88

இயக்கத்திற்கு உதவுவதாகச் சந்தேகித்து இந்தியப்படையினர் வவுனியாவில் 5 கடைகளை முடிச் சீல் வைத்ததுடன் வர்த்தகர்களையும் கைது செய்துள்ளனர்.இதனை விரும்பாத டெலோ இயக்கம் பூட்டிய கடைகளைத் திறக்கச் செய்தது.ஆவெ் கைதுசெய்த வர்த்தகர்களை இந்திய இராணுவம் விடுவிக்கும்வரை யாரும் கடைகளைத் திறக்கக்கூடாதென வேறொரு இயக்கம் கூறியுள்ளது.கடைகளைத் திறப்பதா? முடிவைப்பதா வ என வர்த்தகர்கள் அல்லற்படுகிறார்கள்.

களுத்துறையில் ஜே.வி பியின் ஊரடங்குச் சட்டத்தை மீறியதற்காக வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பசறையில் பாதுகாப்புப் படையினருக்கு தகவல் அளிப்பவர் என்ற குறிப்புடன் 22 வயது இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த டக்ளஸ் என்னும் ரி.சண்முகராசா என்ற டெலோ உறுப்பினர் போட்டி இயக்கத்தினரால் பிடிக்கப்பட்டு அவரது இருகால்களும் துண்டிக்கப்பட்டன.

சுமார் 72 இலட்சத்து50ஆயிரம் டாலர்கள் பெறுமதியான ஹெரோயினுடன் இலங்கைத் தமிழரான விசுவாசம் ஞானப்பிரகாசம் இத்தாலிப் பொலிசாரினல் கைது செய்யப்பட்டுள்ளார்.

தியத்தலாவையில் இரு பிள்ளைகளின் தாய் ஒருவரை படுக்கையில் மண்ணெண்ணெயூற்றி இனந்தெரியாதவர்கள் எரித்துள்ளனர்.

இரத்தினபுரிப் பகுதியில் வெள்ளம் காரணமாக 10 ஆயிரம் மக்கள் அகதிகளாக பாடசாலைகளிலும்,விகாரைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.பஸ் நிலையத்தில் 5 அடி உயரத்திற்கு வெள்ளம் உள்ளது.களுகங்கை,கேகாலை ஆகியவற்றின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

திருமலையைச் சேர்ந்த ஈஸ்வரபாதம்,கிருபானந்தன் ஐந்து வயதுச்சிறுவன் கோபிநாத் ஆகியோர் காணமல் போயுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7.8.88

இந்திய இராணுவத்துடனான மோதல் ஆரம்பித்த 10.10.87ம் திகதி முதல் இது வரை தமது உறுப்பினர்கள் 299 பேர் மரணமுற்றதாகவும் 5 ஆயிரத்திற்குமதிக மான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருட காலத்தில் தென்னிலங்கையில் 148 அரசியற் கொலைச்சம்பவங் கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"சொந்த நாட்டு மக்களை அடக்க இந்திய இராணுவமா? அவர்கள் தமிழர்களின் நலன்காக்கவோ, சமாதானத்தைக் காக்கவோ இங்கு வரவில்லை. இலங்கையால் தமது நாட்டுக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சம்தான் அவர்கள் இங்கு இருப்ப தன் முக்கிய நோக்கம்"–சிறிமா

"மத்திய கிழக்கு நாடுகளில் இன்று சுமார் இரண்டு இலட்சம் இலங்கைப் பெண்கள் பணிப் பெண்களாகப் பணிபுரிகின்றனர்"–வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்.

8.8.88

மட்டக்களப்பு சத்துருக் கொண்டானில் சுசிலாதேவி சுப்பிரமணியம் என்ற 22 வய பெண் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாவற்குடா பூநொச்சிமுனையைச் சேர்ந்த ராஜன் என்னும் அழகையா பூவேந்திர ராஜா என்ற வர்த்தகர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்த 23 வயதான அப்புத்துரை என்னும் சிவகுரு செல்வராஜா என்ற தொழிலாளி கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்.

காலியில் ஐ.தே.கட்சி உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பரந்தனில் புலிகள்–டெலோ மோதலில் இருவர் காயமடைந்தனர். இருவர் கொல் லப்பட்டனர்.

9.8.88

இலங்கை–இந்திய ஒப்பந்தம் பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோ சிக்காமலே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனாற்தான் இன்று சிக்கல் தோன்றியுள் ளது. வடக்குக் கிழக்கு இணைப்பின்றேல் நாடு பிரியும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் வடக்கு, கிழக்கில் அமைதியைக் காணமுடியாது"–தொண்டமான்.

அந்நிய சக்திகள் எமக்கு உதவி செய்வதாக இந்தியா குற்றம் சாட்டுகிறது. வடம ராட்சி ஒப்பரேசன் லிபரேசனின்போது "சாம்" ஏவுகணையை எப்படி இயக்குவதென இந்திய அரசு எமக்குப் பயிற்றுவித்தது. அப்போதெல்லாம் எந்த அந்நிய சக்திகள் இந்த ஏவுகணையைத் தந்தன என இந்திய அரசு கவலைப்படவில்லை. இவ்வாறு புலி களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பிரஜைகள் குழு இனி இயங்குவதில்லையெனத் தீர்மானித்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எமது மண்ணில்கூட நாம் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இழப்பதற்கு எதுவுமில்லாத அளவுக்கு உரிமைகள், உடமைகள், உயிர்கள் அனைத்தையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கும் நாம் தனிமனித உணர்வுகள், சுதந்திரங்களையும் இன்று இழந்து கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணி மிக வெட்கமும், வேதனையும் அடைகிறோம்"—சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர்.

காலியில் புசா பட்டிதோரா என்ற இடத்தில் 10 வயதான சிறுவன் ஒருவன் 10 வயதான அண்டைவீட்டுச் சிறுமியைச் சுட்டுக் கொன்றான்.

10.8.88

பேராதனைப் பொலிஸ் பகுதியில் ஐக்கிய சோசலிச முன்னணி ஆதரவாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டுநகர், அம்பாறைப் பகுதியில் இயக்கமோதல்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், ஆதரவாளர்களும் நாளாந்தம் கொலை செய்யப்படுகின்றனர்.

மொனராகலை எம்.பியின் செயலாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சர்வதேச மன்னிப்புச்சபை இந்திய அரசிற்குச் சமர்ப்பித்துள்ள 1988 ஜூன் மாதத்திற்குரிய அறிக்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது. அதில் 1987 ஜூலை ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து இலங்கையில் தங்கியுள்ள இந்திய இராணுவத்தின் மனிதஉரிமை மீறல்கள், சித்திரவதைகள், மரணங்கள், காணமற்போனவை குறித்தும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி மாணவன் பரமசாமி பரமநாதன், கம்பர்மலையைச் சேர்ந்த முனுசாமி பாபுராஜ், அளவெட்டியைச் சேர்ந்த சின்னையா குணரட்ணராஜா, இணுவிலைச் சேர்ந்த கனகலிங்கம் நாதன் ஆகியோர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டுள்ளதாக விபரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் சுமார் 150 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் மீதான புலிகளின் தாக்குதலை ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டித்துள்ளது.

வவுனியாப் பகுதியின் டெலோ தலைவர் உதயகுமாரன் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முல்லைத்தீவில் எஸ்.தியாகலிங்கம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11.8.88

மட்டக்களப்பு ஆரணியைச் சேர்ந்த ஞானமுத்து இருதயநாதன் என்பவரது சடலம் கைகள் கட்டப்பட்ட நிலையில் இந்தியப்படையினரால் மீட்கப்பட்டது. இச்சடலத்துக் கருகில் கொலைக்கு எல்.ரி.ரி.ஈ உரிமைகோரிய சுவரொட்டிகள் காணப்பட்டன—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜயந்திபுர வீதி, மாமாங்கம் வீதி சந்தியில் தம்பியப்பா ரவீந்திரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொம்மாந்துறையைச் சேர்ந்த ஆர்.சிவேந்திரன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரவு நேர மீன்பிடித்தல் கட்டுப்பாட்டை மீறியதாக 70 மீனவர்கள் யாழ் குடா நாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12.8.88
பூஸா, நீர்கொழும்பு, வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் தாய்மார்களான சுமார் 50 திருகோணமலை அன்னையர்கள் பலமணிநேர உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டனர்.

கடந்த ஜூலைமாதம் 18ம் திகதி யாழ் வளாக மாணவன் விமலேஸ்வரன் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை சுயாதீன மாணவர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.1986ல் விஜிதரன் என்னும் மாணவன் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டபோது நடாத்தப்பட்ட கண்டன நடவடிக்கைகளுக்கு விமலேஸ்வரன் முக்கிய பங்கு வகித்தார்.சுயாதீன மாணவர் சங்க கண்டன அறிக்கையில் இம்மாதிரி நடவடிக்கைகள் முதலாளித்துவ வாதிகளுக்கு துணைசெய்யும் என்பதை புலிகள் இயக்கத்தினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.அத்துடன் தமிழ் மக்கள் விடுதலைக்கும் பாதகமாக அமையும் எனவும்,புலிகள் இயக்கத்தினர் ஏனைய இயக்கங்களின் அரசியல் உரிமையை அங்கீகரிக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.8.88
ஐ.தே.கட்சியிலிருந்து விலகிய முன்னாள் நிதிமந்திரி அதுத்த நடவடிக்கையை பொறுத்திருந்து பார்க்கும்படி கூறியுள்ளார்.

தமிழகத்தில் இதுவரை கைதுசெய்யப்பட்ட 300 ஈழப்போராளிகளில் எல்.ரி.ரி.ஈ புளொட், டெலோ உறுப்பினர்கள் உட்பட பல்வேறு குழுக்களைச் சேர்ந்தோர் அடங்கியுள்ளனர்.மாகாணசபைத் தேர்தல் வடக்குக் கிழக்கில் நடைபெறும்போது புலிகள் இயக்கத்தினர் அதில் பங்குபற்ற முன்வராவிட்டால் அவர்கள் இந்தியாவிலிருந்து செயற்பட இந்திய அரசு தடைவிதிக்குமென தெரியவருகிறது.

14.8.88
வவுனியாப் பகுதியிலுள்ள மன்னகுளம் ரயிற்பாலம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் 7 இந்தியப்படையினர் கொல்லப்பட்டதோடு யாழ் விசேடரயில் சேவையும் சீர்குலைந்தது.

தலவாக்கொல்லையில் தவறணைகளை மூடிவிடும்படி தீவிரவாத இயக்கமொன்றின் பேரில் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.அத்துடன் தலவாக்கொல்லையில் முக்கிய பிரமுகர் ஒருவரை அவதூறு செய்யும் வகையில் நீண்ட கடிதமொன்று வர்த்தகர் தோட்டத்தலைவர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.அக்கடிதத்தில் 10 நகல்களை எடுத்து ஒரு கிழமைக்குள் தெரிந்த 10 பேருக்கு அனுப்பத் தவறினால் D 56 பதிலளிக்கும் என்ற வாசகம் இறுதியில் காணப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

15.8.88

கந்தாவளையில் இயக்கமோதல் காரணமாக குருசாமி, விஜேந்த் என்ற இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வவுனியாவில் இயக்கமோதலில் அமாவாசை இராமசாமி கொல்லப்பட்டனர்.

வவுனியாவில் கொள்கலன்களில் பெற்றோல் எடுத்துச் செல்ல இந்தியப்படை தடை விதித்துள்ளது.

16.8.88

மினுவாங்கொடப் பகுதியில் இராணுவ கோப்ரல் ஒருவர் சக இராணுவ வீரர் ஒருவரைக் கொன்றுவிட்டு தப்பியோடிவிட்டார்.

மதுரை வங்கியொன்றில் கொள்ளையடிக்கப்பட்டதையடுத்து இரு இலங்கையர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டுநகர் கல்லடி வீதியில் ஜெயராஜ் என்பவர் போட்டித் தீவிரவாதக் குழுவொன்றினால் கொல்லப்பட்டார்.

கிளிநொச்சிப் மாவட்டத்தில் பல பகுதிகளில் இடம்பெறும் தேடுதல் காரணமாக இராமநாதபுரம், வட்டக்கச்சி, விஸ்வமடு, தருமபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சி நகரப்பகுதிக்கு இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ளார்கள்.

17.8.88

பூஸா இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டோரில் நாரந்தனை வடக்கைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான கனகலிங்கம் தேவராசா, அன்புவழிபுரத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான செல்வராசா பாக்கியநாதன், செம்புகவத்தையைச் சேர்ந்த ஆறு பெண் சகோதரிகளுடைய செல்லையா வாசுதேவன் ஆகிய மூவர் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருமலை நகர மணிக்கூட்டுக் கோபுரமருகில் குண்டு ஒன்று வெடித்ததில் 8 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 21 பேர் காயமடைந்தனர்.

வவுனியா சின்னப்புதுக்குளப்பகுதியில் இராஜ் இராமசாமி என்பவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்.

ஊறணி வீதியில் மாற்று இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பவளராசா என்பவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உலகில் கிருமிநாசினியால் இறப்பவர்களின் வீதம் அதிகரித்துள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றுமென உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

www.tamilarangam.net

20.08.88

வவுனியாவிலிருந்து 16 மைல்கள் அப்பாலுள்ளஇளமருதங்குளம், சேமமடு ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து சுமார் 160 பேர் கால்நடையாக வவுனியாவுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

வத்தேகம எல்கடுவ என்ற இடத்தில் கிராமசேவையாளர், கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய முகாமையாளர், பஸ் சாரதி ஆகிய மூவரும் தேசப் பிரேமி இயக்கத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுள் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன இந்திய இராணுவத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளன.

21.08.88

சேமமடு கிராமத்தில் இந்திய இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண்களுக்கு ஒரு நேர உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. நோயாளருக்கு மருத்துவ வசதி இல்லையென்றும், காட்டுப் பாதை வழியாக வெளியேறிய சிலரைக் காணவில்லையென்றும் அங்கிருந்து தப்பி வந்தோர் கூறியுள்ளனர். வவுனியாவில் தஞ்சம் புகுந்தோருக்கு ஈபிஆர்எல்எவ் இயக்கம் உதவி புரிகின்றது.

வாழைச்சேனையில் மலர் தேவநாயகம் என்ற பெண்ணை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

நற்பிட்டிமுனையில் இந்திய இராணுவத்தினரால் சுடப்பட்டு காயமடைந்த ராஜலிங்கம் என்ற புலிகள் உறுப்பினர் ஆஸ்பத்திரியில் காலமானார்.

22.08.88

பல உயிரிழப்புகளுக்கு மத்தியிலும் வன்னிப் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்கிறது. 900க்கு மேற்பட்ட பொதுமக்கள் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

23.08.88

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 9ஆம் வகுப்புக்கு மேல் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் பெயர் விபரங்களையும், குடும்ப விபரங்களையும் இந்திய இராணுவம் வீடுவீடாகச் சென்று திரட்டி வருகிறது.

தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்கக் கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வரும் மூவருடன் யோ.ஞானப்பிரகாசம், யோ. யேசுதாசன், த. சிவானந்தன் ஆகியோரும் இணைந்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரையில் ஊரடங்குச் சட்டம் போட்டு கண்ணில் கண்டவர்களை சுட்டுத் தள்ளுவதைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் கடலுக்குப் போனால் சுடுவோம் என்பதை அவன் இப்போததான் கேள்விப்படுகிறான்.

கடல் கூட வேறு யாரோரவின் சொந்தமா?

கடலில் நின்றால் மரண தண்டனையா?

தூசை இடிந்து போய்விட்டான். தனது கனவுகள் நொருங்குவதை அவன் பரிதாபமாக உணர்ந்தான்.

"நீ ஒண்டுக்கும் யோசியாத. எங்கட ஞானப்பிரகாசம் வந்து எங்களப் பாத்துக்குவான்" என்று கன்னியம்மா அவனைத் தேற்றினாள்.

"அதுக்கு உசிரோட இருக்கணுமே" தூசை தனது கண்ணீரை மனைவியிடம் மறைத்துக் கொண்டான்.

கடலையே நம்பியிருந்த அந்தச் சற்றுடலியுள்ள மனிதர்கள் குடிசைகளுக்குள் முடங்கினார்கள். கண்ணுக்கு முன்னால் பரந்தளவில் மீன் பொக்கிசங்களை ஒளித்து வைத்திருக்கும் கடல் இருந்தும் அபாயம் அவர்களை எதுவும் செய்ய விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

வள்ளங்கள் கொஞ்சமும் பொருந்தாமல் மணலில் நின்று உலர்ந்து கொண்டிருந்தன. நாயும், வேறு சில உயிரினங்களும் வள்ளங்களை தமது வசிப்பிடமாகவும், கழிப்பிடமாகவும் பாவித்துக் கொண்டிருந்தன. வள்ளங்களிலும், வலைகளிலும் சிறுவர்கள் விளையாடினார்கள்.

நாட்டில் எத்தனையோ உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கையில் எதுவுமே நடவாதது போல் அரசியல்வாதிகளும், மந்திரிகளும் திறப்பு விழாக்கள் நடாத்தி, சுற்றுப் பயணங்கள் செய்வது போல், விடுதலை இயக்கங்கள் தமக்குள் மோதி தலைமைக் கொடியை 'வீரமாக' நாட்ட முனைவது போல் கடலை இழந்து, வருமானத்தை இழந்து வாடிப்போய் நிற்கும் அந்த ஜீவன்களுக்கு கடனை நினைவூட்ட கடன் கொடுத்தவர்கள் மறக்கவில்லை.

தூசை வீடு தேடியும் கடன்காரர் அதிசயமாக வந்தார். சத்தம் போட்டார். அவன் கடனை அடைக்காவிட்டால் தானும், தனது குடும்பமும் பட்டினியால் செத்துவிடுவோம் என்பது போல மோதிரக் கையை வீசி ஆவேசப்பட்டார். தனது கோபத்தால் வந்த வியர்வையை சங்கிலியை ஒதுக்கித் துடைத்துக் கொண்டார்.

தூசை என்ன செய்வான்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண் முன்னால் தெரியும் காரணத்தைக் கூடக் கண்டு கொள்ளாமல் அவர் கண்மூடித்தனமாக ஆத்திரமடையும்போது தூசையால் தத்துவம் பேச முடியுமா?குனிந்த தலையை எல்லாவற்றிற்கும் ஆட்டிக் கொண்டிருந்தான்.

கடன் கொடுத்தவரால் அடிக்கடிதான் வர முடியும்.பசி அப்படியல்லவே? அது எப்போதும் வந்தது.

அக்கம் பக்கங்கள் கூட்டாகச் சேர்ந்து கரையில் ஒதுங்குபவற்றையும்,கரைக்கு அண்மையில் கடலில் அகப்படுபவற்றையும் பங்குபோட்டு சாப்பிட்டாலும் எத்தனை நாளைக்கு?

இனி எதுவும் சரிவராது என்று நம்பிக்கையிழந்து பல குடும்பங்கள் சொந்தமான,சொந்தமில்லாத வள்ளங்களில் இரவோடிரவாக இந்தியாவுக்குத் தப்பினார்கள்.அப்படிப் போன சிலரின் பிணங்களை அலைகள் நாட்டுப் பற்றுடன் இலங்கைக் கரைகளில் கொண்டு வந்து ஒப்படைத்தன.

சிலர் அகதி முகாம்,வேறு பிரதேசங்கள் என்று நடந்து போய் விட்டார்கள்.

தூசைக்கும்,இன்னும் ஒரு சிலருக்கும் மட்டும் ஏதோ ஒரு நம்பிக்கை.அது தவிர அவர்களுக்கு கடல் மட்டுமே தெரியும்.வேறு எதுவுமே அவர்களுக்குத் தெரியாது.இந் நிலையில் வேறிடங்களுக்கு குடிபெயர்ந்து அவர்களால் என்ன செய்ய முடியும்?எதுவுமே தெரியாத அவர்களை புதிய இடங்களில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

தடைச் சட்டம் போட்டு பல மாதங்களின் பின்தான் அவர்கள் அரசின் கண்களில் பட்டார்கள்.நிவாரணம் என்று பெரிதாக விளம்பரப்படுத்திக் கொண்டு அளவு முறையில் உணவுப் பொருட்களை அவர்களுக்குப் போட்டார்கள்.

உழைத்துத் தேய்ந்து,இப்போது பலவந்தமாக முடக்கப்பட்டு, குடிசைகளில் வாடிச் சுருண்டு போயிருக்கும் அவர்களின் பசியின் அளவை, குளிரூட்டப்பட்ட சாத்திய அறைக்குள்,சுழல் நாற்காலியில் கசங்காத உடையுடன் இருப்பவர்களால் தீர்மானிக்க முடியுமா?தங்களுடைய பத்திரங்களை நிரப்புவதற்காக தமக்குப்பட்ட அளவுகளில் அந்த உழைப்பாளிகளின் பாத்திரங்களில் பிச்சை போட்டார்கள்.

அப்போதும் கூட தூசையும்,கன்னியம்மாவும் ஞானப்பிரகாசத்தைத்தான் நன்கு கவனித்துக் கொண்டார்கள்.தமக்குக் கிடைக்கும் பொருட்களை மாற்றி ஞானப்பிரகாசத்திற்குத் தேவையானதை வாங்கிக் கொண்டார்கள்.தங்களுடைய வயிற்றை அசட்டை செய்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்கும் செய்தி கடன் கொடுத்தவருக்கும் தெரிந்து விட்டது.விரைந்து வந்துவிட்டார்.நிவாரணப் பொருட்களில் கொஞ்சத்தை தனக்குத் தந்தால் அதற்கேற்ற பெறுமதியை கடனில் கழித்துக் கொள்வதாக அவர் தனது 'சலுகை'யை அறிவித்தார்.

"நீ நாசமாய் போக" என்று கூட அவர்களால் திட்ட முடியவில்லை.ஞானப்பிரகாசத்துக்குப் பத்திரப்படுத்திக் கொண்டு எஞ்சியதைக் கொடுத்துக் கடனைக் கழித்துக் கொண்டு வந்தார்கள்.

எத்தனை நாளைக்குத்தான் பசியைத் தாங்கிக்கொள்ள முடியும்?

பசி தன்னால் முடிந்தவரை அவர்களை எச்சரிக்கை செய்து பார்த்தது.கோபித்துப் பார்த்தது.அடம் பிடித்தது.அவர்கள் எதற்கும் மசியாமல் போகவே அராஜகத்தை ஆரம்பித்து விட்டது.

காலில் கட்டெறும்பு கடித்து வலியை உண்டாக்க தூசை முன் கதைச் சுருக்கத்திலிருந்து மீண்டான்.உள்ளேயிருந்து ஞானப்பிரகாசம் அழுதான்.

இருள் முழுவதுமாக வந்து விட்டிருந்தது.நிலவின் ஒளி மங்கலாக மணலில் விழுந்தது.கடல் பேரிரைச்சலுடன் அலைகளை உற்பத்தியாக்கிக் கொண்டிருந்தது.

பக்கத்தில் யாரோ வர தூசை தலையைத் திருப்பினன்.கன்னியம்மாதான்.

என்ன என்பது போல தூசை பார்த்தான்.

"புள்ள இன்னைக்கு சரியா அழுவுறான்" கன்னியம்மா அவனுக்கு பக்கத்தில் குந்தியபடி மெல்லமாகச் சொன்னள்.

தூசை மௌனமாக இருந்தான்.

"அவனுக்கு சரியான பசி போல"

தூசை அவளைக் கூர்ந்து பார்த்தான்.பசியால் பஞ்சடைந்த அந்தக் கண்களில் தாய்மை தெரிந்தது.உதடுகள் உலர்ந்து போயிருந்தன. உடம்பு சுருங்கியிருந்ததால் தாடைகள் வித்தியாசமாகத் தெரிந்தன.ஏனைய அங்கங்களை கிழிந்த சேலை மூடியிருந்தது.

தூசை கடலைப் பார்த்தான்.வெள்ளை அலைகள் மட்டும் அவ்வப்போது ஓடிவந்து மறைவது நன்றாகத் தெரிந்தது.நன்றாகக் காய்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போயிருந்த செடியொன்று காற்றில் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"அவுங்க எனி எப்ப சாப்பாடு கொண்டு வருவாங்க?" சுசை கேட்டது நிவாரணப் பொருட்களை.

"என்னும் ரெண்டு நா இருக்கு" கன்னியம்மை மெல்லமாகப் பதிலளித்தாள்.

அதுவரைக்கும் என்ன செய்வது என்று அவர்கள் இருவருக்கும் தெரியவில்லை. பரந்த கடல் கண் முன்னால் இருக்கையில் விழுந்து சாகலாமா என்று கூட இருவரும் தனித்தனியாகச் சிந்தித்தார்கள். ஆனால் ஞானப்பிரகாசம் நினைவுக்கு வந்ததும் தமது சிந்தனையைக் கலைத்துக் கொண்டார்கள்.

ஞானப்பிரகாசம் இப்போதுதான் பூமிக்கு வந்திருக்கிறான். அவன் இங்கு பார்க்க வேண்டியவை ஏராளம் இருக்கின்றன. அவன் சந்திக்க வேண்டியவை ஏராளம் இருக்கின்றன. வாழ்க்கை என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளாமலேயே தனது வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்காகவா கன்னியம்மா அவனைப் பத்து மாதம் தனது இரத்தத்தில் பாதுகாத்தாள்?

இல்லை. ஞானப்பிரகாசம் வளர வேண்டும். அவனுக்காக அவர்கள் இருக்க வேண்டும்.

ஆனால் பசி?

பசிக்கு உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளக் கூடிய சக்தியில்லையே. பசிக்குப் பசிக்க மட்டும்தான் தெரியும்.

ஞானப்பிரகாசம் மறுபடி உள்ளேயிருந்து அழுதான். இம்முறை சத்தத்தின் வீரியம் குறைந்திருந்ததை அவர்கள் அவதானித்தார்கள்.

"நீ போய் புள்ள பக்கத்தில இரு" என்று சுசை மனைவியை உள்ளே அனுப்பினான்.

காற்று பலமாக வீசியது. நிலவை மேகங்கள் மறைத்து, மறைத்து விளையாடின. அக்கம் பக்கங்களிலிருந்த குடிசைகளுக்குள்ளிருந்தும் அவ்வப்போது முனகல்கள் கேட்டன.

சுசையின் கண்கள் மணலில் தரித்து நின்ற வள்ளத்தையும், கடலையையும் மாறி மாறிப் பார்த்தன.

திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவனாக எழுந்து பக்கத்துக் குடிசைக்குப் போனான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மாரிமுத்து"

"ஆரு?"

"நா சூசை"

மாரிமுத்து சிறிது தாமதத்தின் பின் வெளியே வந்தான்.சூசையைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

"என்ன சூசை புள்ளக்கி சொகமில்லியா?"

"அதில்ல.வள்ளத்தை தள்ளணும்.வாறியா?"

மாரிமுத்து திடுக்கிட்டு சூசையைப் பார்த்தான்."ஒனக்குப் பைத்தியமா?அவுங்க சுட்டுப் போடுவாங்க"

"இல்ல மாரிமுத்து.இன்னெக்கு கடல்லயோ, ஆகாசத்திலயோ எந்த நடமாட்டத்தையும காணல.நா போய்ப் பாக்கறேன்"

"சொன்னக் கேளுப்பா.நாம என் இப்புடி பிச்சை சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கிட்டுக்கம்.அவுங்க நம்ம சுட்டுட்டா நம்ம குடும்பத்தை ஆருப்பா பாத்துப்பா?"

"நீ சொல்றதும் ஞாயந்தான்.ஆன இந்த ஞாயமெல்லாம் புள்ளக்கி சாப்பாடு போடாதே.நீ வந்து வள்ளத்தை தள்ளி விடுறயா?"

"கன்னியம்மா ஒன்ன கடலுக்குப் போவச் சொல்லிச்சா?"

"அவளுக்குத் தெரியாமத்தான நா போகப் போறன்.வள்ளத்தை தள்ளி விடுறயா?"

மாரிமுத்து சூசையைப் பார்த்தான்.கடலைப் பார்த்தான். சூசையின் குடிசையைப் பார்த்தான்.மறுபடி சூசையைப் பார்த்தான்.அவனது தீர்மானத்தை மாற்ற முடியாது என்று தெரிந்து கொண்டான்.

"மாரிமுத்து தள்ளி விடுறயா?" என்று சூசை கெஞ்சினான்.

மாரிமுத்து குடிசைக்குள் போய் தன்னுடைய தம்பியையும் கூட்டி வந்தான்.மூவருமாக வள்ளத்துக்கு வந்தார்கள்.அவசரமாக ஏற்றப்பட்டிருந்ததால் வள்ளம் கடலுக்கு அண்மையாகவே நின்றது.

மூவரும் ஏலேலோ இல்லாமல் தம் பிடித்துத் தள்ளினார்கள். உடம்பில் வலுவில்லாததால் வள்ளம் சிரமமாகவே நகர்ந்தது.

மூவரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு அங்குலம் அங்குலமாக கடலுக்குள் நகர்த்திக் கொண்டு போனார்கள்.கடலைத் தொட்டதும் வள்

www.tamilarangam.net

ளம் சுலபமாக நகர்ந்து கொண்டது. கரையுடனான தொடர்பை துண்டித்துக் கொண்டது.

கடலில் இறங்கி கொஞ்சத் தூரம் வள்ளத்துடன் நடந்த பின் தூசை வள்ளத்தில் ஏறிக் கொண்டான். கரையில் நின்ற மாரிமுத்துவுக்கும், அவன் தம்பிக்கும் கை காட்டி விட்டு துடுப்புப் போட ஆரம்பித்தான்.

கடலில் வித்தியாசமான சத்தத்தைக் கேட்டு கன்னியம்மாவும், ஏனைய குடிசைவாசிகளும் சோம்பலிலிருந்து நிதானமாக விடுபட்டு வெளியே வந்தபோது தூசை சுத்தமாக இருட்டில் மறைந்து போயிருந்தான்.

கன்னியம்மா விசயத்தைத் தெரிந்து கொண்டு விக்கித்துப் போய்விட்டாள். அவளால் ஒவென்று கத்தக்கூட முடியவில்லை. மாரிமுத்து மூலம் விசயத்தைத் தெரிந்து கொண்டவர்கள் கலக்கத்துடன் கடலைப் பார்த்தார்கள்.

தூசைக்குத் துடுப்புப் போடும்போது கைகள் நடுங்கின. எத்தனை கால இடைவெளிக்குப்பின் அவன் கைகள் துடுப்பைத் தொடுகின்றன. கடல் நீர் வள்ளத்தில் தெறித்து அவன் உடம்பில் பட்டபோது முதலில் குளிர்ந்தது. பின்னர் உற்சாகம் வந்தது.

தூசை வாயில் ஏதோ பாட்டை முணுமுணுத்தபடி ஒரு இலக்கைக் குறிவைத்துப் போய்க் கொண்டிருந்தான். கண்கள் விரைவில் இருட்டில் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டன.

கடல் வழக்கம்போல துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. தனது மகனை நீண்ட நாட்களின் பின் சந்தித்த சந்தோசமாயிருக்கலாம். நிலவின் வெளிச்சத்தைப் பிடித்துக் கொண்டு எட்டிப் பார்த்த மீன்கள் அவனையும் பார்த்தன.

தூசை துடப்பை வைத்துவிட்டு வலையை வீசினான். கூடவே எதிர்பார்ப்புகளும் விரிந்தன.

நிலவு நகர நகர தூசையின் படகில் மீன்களும் சேர்ந்தன. அடுத்த வலை வீச்சின்போதுதான் தூசை அந்தச் சத்தத்தை அவதானித்தான்.

ஆகாயத்திலிருந்து சத்தம் வந்தது. பழக்கமான சத்தம். கூடவே ஒளி வட்டமொன்று அவ்வப்போது கடலில் விழுந்து கொண்டிருந்தது.

தூசையின் உற்சாகம் திடீரென மறைந்தது. பரபரப்பானான். வலையை அவசரமாகச் சுருட்டினான். கரையை நோக்கி வேகமாகத் துடுப்புப் போட ஆரம்பித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சத்தம் மிக அருகில் நெருங்கியதுடன் ஒளி வட்டமும் படகின் அருகில் வந்தது.தூசை கரையை மட்டும் இலக்காகக் கொண்டு சுடுப்புப் போட்டுக் கொண்டிருந்தான்.

கரையில் கன்னியம்மா உட்பட குடிசைவாசிகள் அனைவரும் கடலையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.எல்லோர் மனதிலும் ஒரே மாதிரியான எதிர்பார்ப்பு..ஒரே மாதிரியான பயம்.கவலை.

ஐந்து மணித்தியாலங்களின் பின் பத்திரிகை அலுவலகங்களில் 'தப்ப முயன்ற பயங்கரவாதி ஒருவர் கடலில் வைத்துப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்ற கடைசிச் செய்தியை அச்சுக் கோர்த்துக் கொண்டிருந்தார்கள்.

அயல்நாட்டு வாசகர்களுக்கு,

வங்கிகள் தமது கூலிப் பணத்தை உயர்த்தி,வரும் சந்தாத் தொகைகளில் கூடிய தொகையை கழித்துக் கொள்வதால் மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா கீழுள்ளபடி மாற்றப்பட்டுள்ளது.

6 மாதங்கள் - 25,- டி.எம்
1 வருடம் - 48,- டி.எம்

உங்கள் ஆதரவைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கிறோம்.

– கடலோடிகள்

ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கும் கருத்துக்களைக் கொண்டிருக்கும் நூல்களையும் கூடப் படித்து நல்லவை எவை, கெட்டவை எவை என்பனவற்றை நீயே தேர்ந்தெடுக்கும் படியான அறிவை வளர்த்துக் கொள்.

ஔவையார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவமானம்

— அம்பலவன்புவனேந்திரன்.

இரண்டுபட்டு ஊர் இருந்தால்
கொண்டாட்டம் கூத்தாடிக்குத்தானே
திரண்டுகொண்டு வந்த நீங்கள்-திருப்பிக்
கொண்டு சென்றது பிணங்களைத்தானே.

அக்கரையிலிருந்து அனுமார் வந்து
அசோகவனச் சீதையை மீட்டது வேறு-டில்லி
அக்கறை கொண்டு அனுப்பிய அனுமார்கள்
அடைந்த வெற்றியின் அளவுதானேது?

ஊரையும் உலகையும் ஏமாற்றினால்
உங்களின் மூக்குடைந்தது மறைந்திடுமா?
பேரையும் புகழையும் பெறமுடியாது-போரில்
பெரிய பாடம் படித்ததுகூட மறந்திடுமா?

அஞ்சியோடிய சிங்கள வஞ்சகர்களுக்காய்
அலைகடலைத் தாண்டிவந்து நீங்களும்
நெஞ்சு நிமிர்த்த முடியாது புறமுதுகிட்டு
நிலை குலைந்தோடியதை உலகேயறியும்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி எப்போதோ
ஒரு வருடம் கூட ஓடிவிட்டது -நீங்கள்
தப்பாகப் போட்ட கணக்கென்று புரிந்தால்
தப்பிப் பிழைத்து ஊர் சேருங்கள்.

www.tamilarangam.net

# ஜெயம் உடலும்

.... ஜெயா

இங்கு வந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் சமுதாயத்தினரே. இவர்களின் நிகழ்காலத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் விபத்துக்காரணமாக இங்கு வந்தவர்கள் எல்லோரும் வேலைசெய்ய அனுமதிக்கப்படாதபோதிலும் அனுமதிக்கப்பட்டவர்கள் தாம் விரும்பியும், இங்குள்ள தொழிற்கந்தோர்களின் நிர்ப்பந்தங்களாலும் தாம் விரும்பியோ, விரும்பாமலோ தமது எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய வேலைகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இவர்களிற் சிலர் பணத்தை முதன்மைப்படுத்தி தமது ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதிக்கக்கூடிய வேலைகளைச் செய்துகொண்டிருப்பது ஆரோக்கியமற்ற சமூகத்திற்கான அடிகோலலி என்று கருத ஏதுவுண்டு. இங்கு பாதிப்பில்லாத வேலைகள் வெளிநாட்டவருக்கு கிடைப்பது சிரமமானபோதும் பாதிப்பான வேலைகளுக்கான பாதுகாப்புக்களை நாம் தெரிந்திருத்தலும், அவற்றைக் கடைப்பிடித்தலும் அத்தியாவசியமானது.

சில பாதிப்பான வேலைகளுக்கான பாதுகாப்புமுறைகளை இங்கே தருகிறோம்.

விவசாயம் சம்பந்தமான விடயங்களை முதலில் பார்ப்போம். விவசாய நிலங்களுக்கு இரசாயனம், பசளை என்பன இடப்படும்போது கைகளுக்கு கையுறை போட்டுக்கொள்ளுதல் பாதுகாப்பானது. இவைகள் விசிறிக்கொண்டிருக்கும்போது உணவு உட்கொள்ளுதல், புகைத்தல் இவைகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. விலங்குகளுக்கு உணவு போடுதல், வைக்கோல் சம்பந்தப்பட்ட வேலைகள் செய்வோர்களில் உணவுபோடும் வேலைகள் செய்பவர்களுக்குச் சரும வியாதிகள் இருப்பின் இவ்வேலையை தவிர்த்துக்கொள்ளுதல் நல்லது. வைக்கோல் சம்பந்தப்பட்ட வேலைகள் செய்வோர் காச நோய், ஆஸ்த்துமா நோய்கள் இருப்பவர்கள் ஆயின் இவ்வேலைகளைத் தவிர்த்துக்கொள்ளுதல் நல்லது.

இயந்திரம் சம்பந்தப்பட்ட வேலைகள் செய்பவர்கள் கை விரல்களில் மோதிரம் போடுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. நீண்ட முடி வளர்த்தலும் தவிர்க்கப்பட வேண்டியது. இக்காரணிகளால் விபத்துக்கள் ஏற்படுமாயின் எந்தவிதமான நஷ்ட ஈடும் வழங்கப்படமாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரைச்சல் அதிமான இயந்திரங்களில் வேலைசெய்வோர் காதுகளுக்குப் பாதுகாப்பணிகள் அணிந்துகொள்ள வேண்டும். பொதுவாகத் தொழிற்சாலைகளில் வேலைசெய்வோர் பாதுகாப்பான பாதணிகள் அணிவது நல்லது. பாரமான வேலைகள், தொடர்ந்து நின்று வேலைசெய்பவர்கள் இறுக்கமான உள்ளங்கிகள் அணிந்துகொள்வது நல்லது. வர்ணம் விசிறுதல் (பெயின்ற்) அலுமினியம் தேய்த்தல், இரும்பு தேய்த்தல், பிளாஸ்டிக் வேலைகள், அமிலங்கள் உட்பட இப்படியான வேலை செய்பவர்கள் மூக்கிற்கு (மாஸ்க்) மூக்கு மூடி அணிவது நல்லது.

இரசாயன அமிலங்கள் சம்பந்தமான தொழிலகங்களில் வேலைசெய்வோர் கண்ணிற்குப் பாதுகாப்பான கண்ணாடி அணிவது, பாதுகாப்பான கையுறை அணிவது, சருமங்களிற் படாமல் பாதுகாத்துக் கொள்வது போன்ற விடயங்களில் போதுமான கவனமெடுக்க வேண்டும். வேலைமுடிந்த பின்பும், வீடு வந்தபின்பும் கைகளை நன்றாகக் கழுவுவது நல்லது. குழந்தைகளிருப்பின் இச்செய்கையில் கூடிய கவனமெடுத்தல் விரும்பத்தக்கது.

ஒரேவிதமான, மாறுபாடில்லாத வேலைசெய்பவர்கள் தமது மனநிலை பாதிக்கப்படாமலிருக்க தம்மை பத்திரிகைகள், புத்தகங்கள் வானொலி, டி.வி போன்ற வெகுஜன சாதனங்களுடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் நன்மை தரும்.

தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் பொதுவாக் மது அருந்துதலை தவிர்த்துக் கொள்ள வேண்டும். வேலை செய்யும் ஒவ்வொருவரும் தமது வேலை சம்பந்தமான தொழிற்சங்கங்களில் சேர்ந்திருத்தல் அவசியமானது. தொடர்ந்து தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருப்பவர்கள் ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கொரு முறையாவது முழுமையான வைத்தியப் பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ளுதல் நல்லது.


வெல்டிங் வேலைசெய்வோர் பாதுகாப்பான கண்ணாடி அணிவதும், கண்ணுக்கு போதியளவு ஓய்வு கொடுத்தலும் நல்லது. தொடர்ந்து குளிர்சாதன அறைகளில் வேலைசெய்வோர் பாதுகாப்பான உடைகள் அணிந்துகொள்வதும், கூடுதலான அளவு வெய்யிலில் குளித்தலும் நல்லது.

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் எமக்குத் தெரிந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையே. மேலும் விபரங்கள் தெரிந்தோர் இதில் விடுபட்ட விடயங்களையும் சுட்டிக்காட்டி எமக்கு எழுதியனுப்புங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

— பார்த்திபன்

"பாலகுமார், எங்க நிக்கிறாய்?"

"ஹாண்டில்ல முப்பதைஞ்சாம் பக்கம்"

"புத்தகத்தைப் போட்டிட்டு இஞ்ச வந்து ஒரு கறி வை"

'ஒரு நிமிசம் ஆறுதலா இருந்து கதையைப் படிப்போமெண்டால் விடமாட்டாங்கள்' என்று பாலகுமார் முணுமுணுத்துக் கொண்டே புத்தகத்தை அப்படியே கட்டிலில் வைத்துவிட்டு சமையலறைக்கு வந்தான்.

"என்னடாப்பா நீ பாத்து ஏதேன் வைக்க மாட்டியே?" பாலகுமார் அலுப்புடன் ஞானத்தைப் பார்த்துக் கேட்டான்.

சோற்றை இறக்கி வடித்துக் கொண்டிருந்த ஞானம் "அலுப்பெண்டா விடு. சோத்துக்க பாலே ஊத்தி, சீனியும் போட்டுச் சாப்பிருவம்" என்று சொல்விட்டுப் போய்விட்டான்.

பாலகுமார் குளிர்சாதனப் பெட்டிக்குள் விறைத்துப் போயிருந்த மாமிசத்தைக் கைகளால் எடுக்க முயன்று, முடியாமல், கத்தி, முள்ளுக் கரண்டி போன்ற ஆயுதங்களைப் பாவித்துப் பனியை உடைத்தான். 'இதைக் கூட வெளியில எடுத்து வைக்கப் பஞ்சி'

வெளியில் எடுத்து வைக்கப்பட்ட இறைச்சியை வெட்டக் கத்தி மறுத்தது. பாலகுமார் தனது முழுப் பலத்தையும் பிரயோகித்துக்கொண்டிருந்தான்.

| தொடர்கதை | 34 |
|---|---|



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன ஆரோடையோ சண்டை பிடிக்கிறது மாதிரி நிக்கிறாய்" என்று கேட்டுக் கொண்டே முத்து உள்ளுக்கு வந்தான்.

"என்ன இறைச்சியெண்டு தெரியேல.அநேகமா முதலை இறைச்சி யாத்தான் இருக்க வேணும்.இல்லாட்டி வெட்ட உவ்வளவு கஷ்டமா இருக்காது." என்று பாலகுமார் மூச்சு வாங்கினான்.

"உது மாட்டிறைச்சியடாப்பா" என்று முத்து சொல்லவும் பால குமார் கத்தியைப் போட்டுவிட்டு நிமிர்ந்தான்."மாடோ"

"ஏன் நீ சைவமே?"

"மாட்டுக்கு மருந்தடிச்சு ஆறு மாசத்தில வளர வேண்டிய மாட்டை ஆறு கிழமைக்குள்ள பெரிசாக்கிறுங்களாம்.மாடு முழுக்க மருந்தெண்டு அடிக்கடி ரீவியில காட்டுறுங்கள்.நீ மலிவெண்டு வாங்கியாருய்."

"உப்பிடிப் பாத்தா கடைசியா உம்வெல்ற் சுற்ஸ் பப்பியர்தான் சாப்பிட வேண்டிவரும்.கோழியை வேண்டிலு தூடெண்ணிறியள்.பண்டியெண்டா பரு வரும் என்னுறியள்.அப்ப என்னத்தைச் சாப்பிடுறது?"

"கொஞ்ச நாளைக்கு மரக்கறியெண்டா என்ன?"

"அது மட்டும் பொலித்தீனுல மூடிக் கொண்டு வளருதாக்கும். எல்லாம் அற்றெும் கலந்த மண்ணுக்குள்ளதான் முளைக்குது."

"நல்ல இடத்தில வந்து மாட்டுப்பட்டம்.அங்க நாட்டில சனம் சாப்பிட சாப்பாடில்லை.இஞ்ச எக்கச்சக்கமாக இருந்தும் சாப்பிடேலாம கிடக்கு.போற போக்கில பச்சைத் தண்ணிகூட குடிக்கேலாமத்தான் வரும்"

"போத்தல் தண்ணியும் கெமிக்கலெண்டு எப்பவோ ரீவியில காட்டிப் போட்டாங்கள்"

"ஏன்தான் இங்க வந்தமோ?"

"உங்களை கட்டாயம் வரச்சொல்லி ஜேமன்காரன் காட்டே போட்டவன்.நீங்களா ஒட்டையருக்குள்ளால வந்திட்டு இப்பேன் குறைப்படுறியள்" என்று ஞானம் உள்ளேயிருந்து குரல் கொடுத்தான்.

பாலகுமார் அத்துடன் உரையாடலை நிறுத்திவிட்டு மாட்டை மறுபடி அறுக்க ஆரம்பித்தான்.

முத்து தன்னுடைய பங்கிற்கு ஏதாவது கறி வைக்கலாமா என்று ஆராய்ந்து,கீரைப் பெட்டியை தெரிந்தெடுத்தான்.தண்ணீரில் பிடித்துத் திண்ம நிலையை ஓரளவிற்கு கரைத்து அடுப்பில் ஏற்றினுன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஞானம் உன்ருக்க என்ன செய்யிறன்?" பாலகுமார் இறைச்சிக்கான உப பொருட்களை வெட்டிக் கொண்டு கேட்டான்.

"தாய் கடிதம் போட்டிருக்கிறு. அதுதான் திருப்பித் திருப்பிப் படிச்சு பாடமாக்கிக் கொண்டிருக்கிறன்"

இதன் பிறகு இருவரும் மௌனமாக சமையலில் ஈடுபட அருப் பிலிருந்த பாத்திரங்கள் மட்டும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தன.

மதிய நேரம். அந்தக் கட்டிடத்தின் எல்லாச் சமையலறைகளும் புகைவிட்டுக் கொண்டிருந்தன. ஞாயிற்றுக் கிழமையாதலால் அநேகமானோர் கட்டிடத்திலேயே இருந்தனர்.

யாரோ ஒருவன் சத்தமாக மாடிப் படிகளைக் கழுவிக் கொண்டிருக்க, "நல்ல இருக்கிற படியளை ஏன்ரா தண்ணி ஊத்தி கரைக்கிறாய்?" என்று வேறு யாரோ அவனைப் பலமாகத் திட்டுவது கேட்டது.

ஒவ்வொரு அறைகளிலுமிருந்தவர்கள் தங்கள், தங்கள் ரசனைகளுக்கேற்ப ஒலிநாடாக்களைச் சுழல விட்டிருந்தமையினால் கீழைத்தேய, மேலைத்தேய சங்கீதங்கள் ஒன்றுடனொன்று இணைந்து இசைப் புரட்சி செய்துகொண்டிருந்தன.

முந்து கீரையை முடித்துக் கொள்ள, வெப்பமாக இருந்த அதே அடுப்பில் பாலகுமார் கறியை வைத்துக் கிளறிவிட இருவருமாக வாழ் சக படுக்கை அறைக்குள் வந்தார்கள். ஞானம் இன்னும் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

"அம்மா என்னவாம்?" பாலகுமார் வானொலியில் கை போட்டு 'அடியான பாடல்' கேட்கும் அலைவரிசையைத் தேடினான்.

"கடிதம் முழுக்க என்ரை சுகத்தை விசாரிச்சுத்தான் எழுதியிருக்கினம். தங்களைப் பற்றி ஒண்டுமே எழுதேல"

"உனக்கிருக்கிறது அம்மா. எனக்கும் கொஞ்சம் வீட்ட இருக்குதுகள். என் பேசுவான். ரு இன் வன் வேண்டியிருப்பு. ரீவி வேண்டியிருப்பு. மதிவுக்குப் பூப்போட காசனுப்பு என்டுதான் கடிதம் வரும்" என்று பாலகுமார் சலித்துக் கொண்டான்.

"பாத்தியேடாப்பா. ரெண்டுவிதமான சனமும் எங்கட நாட்டில தான் இருக்கு. வீடே இல்லாம சாப்பாட்டுக்காக சனம் தெருவில அலைஞ்சு கொண்டிருக்கு. மற்றதுகள் என்னடாவெண்டா சாமத்தியச் சடங்கு, கலியான வீடெண்டு திறமா கொண்டாடி வீடியோ கசட்டில எடுத்து இஞ்ச அனுப்பி கசட்டில மிச்சத்துக்கு இங்கிலிஸ் பாட்டு அடிச்சு அனுப்பட்டாம்." என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முத்து உணர்ச்சிவசப்பட்டான்.

"ஊகும். அணுகுண்டு வெடிச்சாலும் எங்களில கொஞ்சச் சனம் திருந்தவே மாட்டுது. வீரகேசரிப் பேப்பர் பாக்கிறனி தானே? முன்பக்கம் முழுக்க ஆமிக்காரன் சுட்டு பொதுசனம் கொலை, இனம் தெரியாத நபர் சுட்டு பொதுசனம்கொலை, இயக்க மோதலில பொதுசனம் கொலை எண்டு நியூஸ் நிரம்பிருக்கேக்க, கடைசிப் பக்கத்தில பேத்டே, கலியாண வீடுகளுக்கு பரிசிலிருக்கும் சித்தப்பா, சித்தி, சுவிசிலிருக்கும் அண்ணு, அண்ணி, கனடாவிலிருக்கும் மாமா, மாமி வாழ்த்துத் தெரிவிக்கினம்" ஞானம் கடிதத்தை மடித்து வைத்துவிட்டுச் சொன்னன்.

"அடுப்பில என்ன வைச்சனி? மணக்குது?" முத்து சொல்லிவிட்டு சமையலறைக்கு விரைந்தான். "மாடு நாசமாய்ப் போச்சு" என்று உள்ளேயிருந்து கத்தினன்.

"கிளறுதை. கொஞ்சம் தண்ணிவிட்டு சூடாக்கிப் போட்டு இறக்கி வை. நாங்கதானே சாப்பிடுறது. சாப்பாட்டுக்கு முந்தி ரண்டு போத்தலை உள்ளுக்க விட்டா கறியில எந்தப் பிழையும் தெரியாது" பாலகுமார் அறைக்குள்ளிருந்தபடியே கட்டளைகளை அனுப்பினன்.

ஞானம் கடிதத்தை தனது அலுமாரிக்குள் வைத்துவிட்டு கடிதம் எழுதும் நீலத்தாளையும், பேனவையும் எடுத்தான். "உன்ரை அலுவல்கள் எந்தளவில நிக்குது?" என்று பாலகுமாரைக் கேட்டான்.

"சொன்னுப்போல அதையும் மறந்து போனன். இண்டைக்கு வரச் சொன்னவன். விட்டா ஆளைப் பிறகு பிடிக்கேலாது" பாலகுமார் திடீர் அவசரமானன்.

"சாப்பாடு முடிஞ்சுது. சாப்பிட்டிட்டு போ" முத்து சொல்லிக் கொண்டே சமையலறையிலிருந்து வெளியே வந்தான்.

"நீங்க சாப்பிடுங்கோ. நான் பிறகு வந்து சாப்பிடுறன். ஞானம் உன்ர பாக்காட்டை எடுக்கிறன்" பாலகுமார் சொல்லிக் கொண்டே அலுமாரியிலிருந்ததை எடுத்துக் கொண்டு பறந்தான்.

"உவன் எங்க விழுந்தடிச்சு ஓடுறன்?"

"புத்தகம் தலைமாத்தி வந்திட்டுதாம். எடுக்கப் போறன்"

"உம். உவனும் ஆயிரத்தி தொளாயிரத்தி எண்பத்தாறும் ஆண்டிலயிருந்து ட்ரை பண்ணிக் கொண்டேயிருக்கிறன். உவனுக்குப் பிறகு வந்ததுகள் எல்லாம் கனடா போய் இப்ப இங்க வந்து சுகம் விசாரிச்சுப்போட்டு போறுங்கள்" முத்து நண்பனுக்காக வருத்தப்பட்டான்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 செப்டெம்பர் 1988 கலம்: 9

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி................ SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202-507156

© Nachdruck nur mit Genehmigung
des Herausgebers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு:

சந்தா விபரம் (தபாற்செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்